தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
21/08/1989.

# இவர்கள் சந்தர்ப்பவாதிகள்

அமைதிப்படை விலகலுக்கு முன்னர் நான்கு விடயங்களுக்கு அரசின் தீர்வு தேவை.

-ஈரோஸ்.

இந்தியப்படை வெளியேறிய பின் 1987 இற்கு முன் இருந்த நிலை தோன்றுமோ என மக்கள் பயப்படுகின்றார்கள்.

-ஈரோஸ்.

இந்திய அரசு சொல்வதை, இந்திய அரசின் கைக்கூலிகள் சொல்வதைத்தான் ஈரோசும் கூறுகிறது. இன்னுமோர் வகையில் பார்த்தால் இந்தியாவிற்காக ஈரோஸ் பேசுகிறது.

தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்துப் பேச இந்தியாவிற்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

1987 இற்கு முன் தமிழ், முஸ்லிம் மக்கள் இருந்ததிலும் 1987 இற்குப் பின் அதாவது இந்தியா வந்த பின் பாதுகாப்பாக உள்ளார்கள் என்ற பொய்யான நிலைப்பாட்டை ஏன் ஈரோஸ் எடுக்கின்றது? ஏன் உண்மையை மறைக்கின்றது?

எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டபோதும், தனது அங்கத்தவர்கள் கொலைசெய்யப்பட்டபோதும் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக போலி அனுதாப அறிக்கைகளை இடையிடையே வெளியிட்டு இந்திய எஜமானர்களின் அனுமதியுடன் வரையறுக்கப்பட்ட ஊர்வலங்களை நடாத்தியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய ஆக்கிரமிப்பாளர்களுடன் சேர்ந்து போலியான நிவாரணம்கொடுப்பனவுக் கூட்டங்களை நடாத்தியும் தமது சந்தர்ப்பவாத அரசியலை ஈரோசினர் வெட்கக்கேடானமுறையில் நடாத்திக்கொண்டுவருகின்றனர்.

இதன் உச்சக்கட்டமாக எமது மக்களைக் கொன்று, கொடுமைப்படுத்தி, எமது தேசத்தையே நாசஞ்செய்துகொண்டிருந்த இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை எமது மண்ணிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் என ஒருமித்துக் குரல்

எழுப்பி இந்திய அரசிற்கு நெருக்கடியைக் கொடுத்துக்கொண்டிருக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில், இந்திய இராணுவத்தின் வெளியேற்றம் தொடர்பாக இந்தியா கொண்டிருக்கும் நிலைப்பாட்டையே தானும் கடைப்பிடிக்கப்போவதாக ஈரோஸ் அறிவித்துள்ளது.

இந்தியாவின் நிலைப்பாடு என்பதன் அர்த்தம் எமது மக்களை அடக்கி, ஒடுக்கி, கொன்றுகுவித்து தமிழீழத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிவைத்திருப்பதுதான்.

இதைத்தான் ஈரோசும் அங்கீகரித்துள்ளது.

மேற்குறித்த அறிவிப்பிற்கூடாக இந்திய இராணுவம் எமது மண்ணில் புரிந்த, புரிந்துகொண்டிருக்கும் மனிதப் படுகொலைகளுக்கு ஈரோசும் ஆதரவு அளித்து, அனுசரணையாகவுள்ளது என்றே அர்த்தம்.

* தனது அங்கத்தவர்களில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் நிராயுதபாணிகளான நிலையில் இந்திய இராணுவத்தாலும், அவர்களுடைய கூலிப்பட்டாளங்களினாலும் இந்திய இராணுவ முகாம்களுக்குள்ளேயும், வெளியேயும் வைத்து அநாதைகளைப்போல் சுட்டுக்கொல்லப்பட்டபோதும்,

* ஈரோசின் ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் தெரு நாய்களைப்போல் அடித்து நொருக்கப்பட்டு அவமதிக்கப்பட்டபொழுதிலும்,

* எமது மக்களில் 6,000 இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு தேசமே இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுதிலும்,

* ஆயிரக்கணக்கான சிறுவர்களும், இளைஞர்களும், யுவதிகளும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களினாலும், ஈ பி ஆர் எல் எவ் போன்ற கும்பல்களினாலும் பகிரங்கமாகவே கடத்திச்செல்லப்பட்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவ முகாமிற்குள் வைத்துச் சீரழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுதும்,

* இந்திய ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்ற தமிழ் மக்களின் ஏகோபித்த மனவிருப்பத்தின் மத்தியிலும்,

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை திருப்பி அழைக்கமறுத்து தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்களை அழித்துக்கொண்டிருக்கும் இந்திய அரசின் நிலைப்பாட்டையே ஈரோசும் ஆதரிக்கின்றது என்பதன் அர்த்தத்தை எமது மக்கள் புரிந்துகொள்வார்கள்.

இதற்கூடாக தமிழ் பேசும் மக்களுக்கு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமே பாதுகாப்பை வழங்குகின்றது என்ற இந்திய அரசின் வெட்கங்கெட்ட கருத்தை ஈரோசும் ஏற்றுக்கொள்கின்றது.

அதற்கூடாக இந்திய வல்லாதிக்கத்தின் பகடைக்காய்களாக தமிழீழ மக்கள் பயன்படுத்தப்படுவதை ஈரோசும் அங்கீகரிக்கின்றது என்றே கருத வேண்டியுள்ளது.

கடந்த காலங்களிலும் பலதடவைகள் இவ்விதமே ஈரோஸ் இயக்கம் சந்தர்ப்பவாத அரசியலையே மேற்கொண்டது. இவர்கள் மக்களால் இனங்காட்டப்படவேண்டும் என்பதற்காக நாம் மௌனமாகவே அவைகளை அவதானித்துக்கொண்டிருந்தோம்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் எமது மண்ணில் இருந்தாலும்சரி, இல்லாமல் போனாலும்சரி இருநிலைகளிலும் தப்பிப்பிழைக்குப் சந்தர்ப்பவாத நிலைப் பாட்டையே இதுவரைநாளும் ஈரோஸ் கொண்டிருந்தது.

இப்பொழுது துரோகிகளை மக்கள் சுலபமாக அடையாளங் கண்டுவிட்டனர்.

ஆனால் சந்தர்ப்பவாதிகள் அடிக்கடி மக்களிடமிருந்து தப்பித் துக்கொள்கின்றனர்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அரசியல் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

---

வெளியீடு:-பிரச்சார வெளியீட்டுவாரியம், அரசியல் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள்.